விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இந்திய மருத்துவ சிகிச்சை முறைகளாகிய சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ சிகிச்சை முறைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகள், தைலங்கள், சூரணங்கள், லேகியங்கள் மற்றும் புற சிகிச்சைக்கு பயன்படுத்தப்படுபவை அனைத்தும் மூலிகையிலிருந்து தயார் செய்யப்பட்டு அனைத்து பிரிவுகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

110—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 55511—திரு. எஸ்.ஆர் பார்த்திபன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி துவங்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மாநிலத்தில் தற்போது ஒரு அரசு மற்றும் ஒன்பது சுயநிதி ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவை ஓமியோபதி மருத்துவர்களின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, நாமக்கல் மாவட்டத்தில் புதிய இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி கல்லூரி துவங்கிட அவசியம் எழவில்லை.